**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**MCOP. No.257/2025**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 24–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: சரண்யா** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். **ம.சா.2. சரண்யா ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.15. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு மனுதாரர் மனுவில் கோரியபடி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்துபோனவர் என் பாட்டி ஆவார். காவல்துறையில் நான் விபத்தை பற்றி புகார் கொடுக்கவில்லை. காவல்துறையினர் என்னை விபத்து குறித்து விசாரித்தார்கள். பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து வெளியே வரும் போது அந்த இடத்தில் உள்ள பழக்கடையில்

விபத்து நடந்தது. பேருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது நாங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றோம். விபத்து பேருந்து வெளியே செல்லும் இடத்திற்கு வெளியே உள்ள பழக்கடைக்கு அருகில் நடந்தது. என் பாட்டி முன்னால் சென்றார் நான் பாட்டிக்கு பின்னால் சென்றேன் அப்போதுதான் விபத்து நடந்தது. என் மீது பேருந்து மோதவில்லை என் பாட்டி மீது தான் மோதியது. உங்கள் பாட்டி பேருந்து வருவதை கவனிக்காமல் திடிரென்று குறுக்கே வந்ததால் பேருந்து அவர் மீது மோதியது என்று சொன்னால் சரியல்ல. பேருந்து வருவதை கவனிக்காமல் உங்கள் பாட்டி பேருந்தில் விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு காரணம் உங்கள் பாட்டியில் அஜாக்கிரதைதான் என்று சொன்னால் சரியல்ல பேருந்தின் ஓட்டுநர்தான் காரணம்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.24 17:23:40 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.